பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 28 | வெள்ளிக்கிழமை | 14.11.2025 | அதிர்வு 107

## மாவீரர் துயிலும் இல்லங்களை தமிழர்களிடம் ஒப்படையுங்கள்

### அநுர அரசிடம் வலியுறுத்து



"வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தினர் ஆக்கிரமித்துவைத்துள்ள சகல மாவீரர் துயிலும் இல்லங்களையும் அங்குள்ள

06



# நல்லூரில் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கான பணி ஆரம்பம்

## தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து முன்னெடுப்பு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து நல்லூரில் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளன.

மாவீரர் வாரம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில் குறித்த காணியில் ஆரம்ப கட்டப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

07



# அரசுக்கு அழுத்தம் வழங்கவே நுகேகொடையில் போராட்டம்



## அது ஆட்சிக் கவிழ்ப்புக்கான பேரணி அல்ல என மொட்டுவின் முக்கியஸ்தர் வீரசேகர தெரிவிப்பு

வரும் நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள பேரணியானது ஆட்சிக் கவிழ்ப்புக்குரிய போராட்டம் அல்ல என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள எதிரணியின் பேரணி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

06




தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும் நாடாளுமன்றக் குழுவும் நேற்று மாலை சுமார் ஒரு மணி நேரம் இணைய வழியில் கலந்துரையாடின.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீது இன்றைய தினம் இடம்பெறும் வாக்கெடுப்பின்போது தமிழரசுக் கட்சி எப்படி நடந்து கொள்வது என்பது குறித்து ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. ஆயினும், கூட்டத்தின் முடிவை ஊடகங்களுக்கு அறிவிப்பதில்லை என்று கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகின்றது. அதனால் சம்பந்தப்பட்ட தரப்புகள் ஊடகங்களோடு தொடர்பைத் துண்டித்துத் தள்ளி நின்றன.

ஏற்கனவே வரவு – செலவுத் திட்டத்தை எதிர்ப்பது அல்லது வாக்களிப்பில் பங்குபற்றாமல் தவிர்ப்பது என்ற முடிவுகளில் ஒன்றை எடுக்கும் எண்ணத்தில்தான் தமிழரசு கட்சி தீர்க்கமாக இருந்தது. இந்த முடிவில் ஒன்றை இன்று தமிழரசுக் கட்சி சார்பில் விவாதத்தை முடித்து வைத்து பேசும் சாணக்கியன் நாடாளுமன்றில் அறிவிப்பார் என்ற விடயம் மட்டும் தமிரசுக் கட்சியின் சம்பந்தப்பட்ட

06



# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அஞ்சலி செலுத்தினார் திருமாவளவன்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல். திருமாவளவன் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவிடத்திற்கு சென்று உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

நேற்று பலாலி விமானத் தளம் ஊடாக யாழ் வந்த அவர் நேற்றே முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் அவரின் வருகை தந்தார். அவரை அப்பகுதி பொதுமக்கள் வரவேற்று, பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தனர்.

அதனைத் தொடர்ந்து, கவிஞர் யோ. புரட்சி தன்னுடைய "ஆயிரம் கவிதைகள்" நூலை தொல். திருமாவளவன் அவர்களிடம் கையளித்தார்.

பின்னர் திருமாவளவன் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் சென்றடைந்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள உறவுகளுக்கான பொதுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தமிழர்களை நினைவுகூரும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, உள்ளூர் மக்களிடையே பெரும் உணர்ச்சி பூர்வமான சூழலை ஏற்படுத்தியது.










## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை-2025

"ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்"

- அமிர் றே (இந்திய ஆன்மீகக் குரு)




# ஐயப்ப யாத்திரை புனித யாத்திரையாக அரசால் பிரகடனம்

## வெளியானது வர்த்தமானி

ஐயப்ப யாத்திரை புனித யாத்திரையாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

ஐயப்ப பக்தர்களின் நீண்ட கால எதிர்பார்ப்பாக இருந்த ஐயப்ப யாத்திரையைப் புனித யாத்திரையாகப் பிரகடனப்படுத்தும் கோரிக்கை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பின் வேண்டுகோளுக்கிணங்க, புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆலோசனை பிரகாரம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பரிந்துரைக்கமைய அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதையடுத்து அதற்கான வர்த்தமானி அறிவித்தல் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශේෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

EOG 11-0077

# பயங்கரவாத தடுப்பு சட்டத்தை இரத்து செய்வதற்கான பரிந்துரைகள் அறிக்கை நீதியமைச்சரிடம் கையளிப்பு



பயங்கரவாத தடுப்பு சட்டத்தை இரத்து செய்வதற்கான பரிந்துரைகள் அடங்கிய நிபுணர் குழுவின் அறிக்கை நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்காரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்னவினால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழுவின் இந்த அறிக்கை பொதுமக்களுக்கு எதிர்காலத்தில் காட்சிப்படுத்தப்படும் என நீதியமைச்சு தெரிவித்துள்ளது.




# பாகிஸ்தானில் தங்கியிருக்க இலங்கை அணி இணக்கம்

இலங்கை கிரிக்கெட் அணியின் அனைத்து வீரர்களும் பாகிஸ்தானில் நடைபெறும் போட்டிகளுக்காக தொடர்ந்தும் அங்கு தங்கியிருக்க இணக்கம் தெரிவித்துள்ளனர் என இலங்கை கிரிக்கட் நிறுவனம் நேற்று அறிக்கை வெளியிட்டு அறிவித்தது.

நேற்று நடைபெறவிருந்த இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2ஆவது சர்வதேச ஒருநாள் போட்டி இன்றைய தினத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது சர்வதேச ஒருநாள் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முக்கோண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் இலங்கை கிரிக்கட் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடரின் சகல போட்டிகளும் ராவல் பிண்டியில் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு இலவச நீரிழிவுப் பரிசோதனை

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகமும் வை.எம்.சி.ஏ . நிறுவனமம் இணைந்து நடத்தும் இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

யழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நாளை காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், உடல் திணிவுச் சுட்டி, வைத்திய ஆலோசனைகள் வழங்கல் என்பன இடம் பெறவுள்ளன.

### யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில்

# போதை மாத்திரைகளுடன் மூன்று இளைஞர்கள் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள்களுடன் குற்றவாளிகளைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற நிலையில் நேற்று போதை மாத்திரைகளுடன் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் கலட்டிப் பகுதியில் மூன்று இளைஞர்களைப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் கைது செய்து சோதனையிட்ட வேளை அவர்களிடம் இருந்து 50 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவரும் 20, 21, 22 வயதுடையவர்களாவர்.

மேற்படி மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அவர்களை இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.







# கிரிந்தவில் போதைப்பொருளுடன் கைதான சந்தேகநபர்களை தடுத்து வைக்க அனுமதி

கிரிந்த கடற்கரையில் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தில் 07 நாள்கள் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

345 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 07 சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மேல் மாகாணத்தின் வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் கிரிந்த கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது போதைப் பொருளுடன் 06 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் போதைப் பொருள் கடத்தலின் பிரதான சந்தேகநபரும் பின்னர் கைது செய்யப்பட்டார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் உரிமையாளர் என கருதப்படும் “ரன் மல்லி” என அழைக்கப்படும் ரன்உலுகே சரித் சந்தகெலும் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள “ஹரக் கட்டா” என அழைக்கப்படும் நதுன் சிந்தக என்பவரின் உதவியாளராவார்.

கடந்த மார்ச் 20ஆம் திகதி ரன்மல்லி என்பவருக்கு சொந்தமான 46 கோடி பெறுமதியான ஹெரோயினுடன் திக்வெல்ல ஊருகமுவ பகுதியில் வைத்து சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தென் மாகாண பொலிஸ் மாஅதிபர் கித்சிரி ஜயலத் தெரிவித்துள்ளார்.

# லொத்தர் சபை முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவுக்கு பிடியாணை



தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்தது.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேகநபரான துசித்த ஹல்லொலுவவுக்குப் பிணை வழங்கியவர் நீதிமன்றத்தில் ஆஜராக தவறியமையால் கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா இந்த உத்தரவை பிறப்பித்தார்.

நாரஹேன்பிட்டி பகுதியில் துசித ஹல்லொலுவவின் வாகனத்தை தாக்கியமை மற்றும் துப்பாக்கிச்சூடு நடத்தியமை ஆகிய சம்பவங்கள் தொடர்பில் நடைபெற்றுவரும் விசாரணைகள் தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சுகவீனம் காரணமாக சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாதென சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பான மருத்துவ அறிக்கையை எதிர்வரும் நாள்களில் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் குறிப்பிட்டார்.

மேற்படி சந்தர்ப்பத்தில் சந்தேகநபர் சார்பாக பிணைதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

அந்த பிணைதாரர் பகிரங்க நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கிற்கான பிணைதாரர் அல்ல எனவும் துசித ஹல்லொலுவவுக்கு எதிரான மற்றுமொரு வழக்கின் பிணைதாரர் எனவும் உறுதிபடுத்தப்பட்டதன் பின்னர் மேலதிக நீதவான் சந்தேகநபருக்கு எதிராக பிடியாணை உத்தரவை பிறப்பித்தார்.

துசித ஹல்லொலுவவின் வாகனத்திற்கு துப்பாக்கிச்சூடு நடத்தி அங்கிருந்த கடித கோப்புகளை கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்துள்ள விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வை அறிவித்தார் தேர்தல் ஆணையாளர்



தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் பதவியில் இருந்து ஓய்வுபெறுவதாக சமன் ஸ்ரீரத்நாயக்க அறிவித்துள்ளார்.

சமன் ஸ்ரீரத்நாயக்க, 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

34 வருடங்களாக அரச சேவையில் பணியாற்றிய சமன் ஸ்ரீரத்நாயக்க, 2025 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதியுடன் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

தனது கடமையின் போது உதவிய முன்னாள் அமைச்சர்கள், அரசாங்க ஊழியர்கள், அமைச்சர்கள், பிரதம அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சமன் ஸ்ரீரத்நாயக்க நன்றியைத் தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வட்டாரங்களில் இருந்து கசிந்தது.

கடந்த வாரம் சாணக்கியனின் தந்தையாரின் இறுதி நிகழ்வின்போது தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் கணிசமான நேரம் உரையாடி இருந்தனர். அந்தச் சமயத்தில் ஜனாதிபதியோடு இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து நேரடியாகப் பேசுவதற்கு தமிழரசுக் கட்சி விருப்பம் தெரிவித்து அனுப்பிய கடிதத்திற்கு, ஜனாதிபதி தரப்பில் இருந்து பதில் வராதமை குறித்து சாணக்கியனும் சுமந்திரனும் தங்களின் கடுமையான அதிருப்தியை ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தனர் என்பதை சந்திப்பு நடந்த உடனேயே என் பத்தியில் கோடி காட்டியிருந்தேன்.

நேரடிப் பேச்சுக்கு நேரம் ஒதுக்கி ஏற்பாடு செய்யாவிட்டால், வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போது அதனை எதிர்த்து வாக்களிப்பது என்ற நிலைப்பாடு தமிழரசுக் கட்சிக்குள் ஆழமாக இருப்பதாக ஜனாதிபதியிடம் அச்சந்திப்பின்போது தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே இன்று மாலை வாக்களிப்புக்கு நேரத்துக்கு முன்னர் – அல்லது தமிழரசுக் கட்சியின் சார்பில் சாணக்கியன் இன்று நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு முன்னர், ஜனாதிபதி – தமிழரசுக் கட்சியினர் நேரடிச் சந்திப்புக்கான நேர ஒதுக்கீடு பற்றிய தகவலை தமிழரசுக் கட்சியின் தலைவர் அல்லது செயலாளருக்கு அனுப்பி வைக்க ஜனாதிபதி செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது என ஜனாதிபதி செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. பெரும்பாலும் வரும் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை நண்பகலில் தமிழரசுக் கட்சியை ஜனாதிபதி சந்திப்பதற்கான நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான தகவல் இன்று காலையில் தமிழரசு கட்சியின் தலைவர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதியோடு தொடர்புடைய அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அப்படி நேரம் ஒதுக்கீடு இடம் பெற்று, அது பற்றிய தகவல் கட்சியின் தலைமைக்கு உரிய முறையில் தெரிவிக்கப்படுமானால், இன்று தமிழரசுக் கட்சி வரவு – செலவு திட்டம் மீதான வாக்கெடுப்பின் போது அதனை எதிர்க்காமல் நடுநிலை வகிப்பதன் மூலம் பேச்சுக்கான சுமுக சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து உரிய முறையில் தகவல் தெரிவிக்கப்படாவிட்டால் வரவு – செலவுத் திட்டத்தை தமிழரசுக் கட்சி எதிர்த்து வாக்களிக்கும்.

பெரும்பாலும் முதலாவதுதான் – முன்னையதுதான் – நடக்கும் என்று நான் நம்புகிறேன்.

அறுபதுகளில் டட்லி சேனநாயக்கா அரசுடன் சேர்ந்து சமரச முயற்சிகளை முன்னெடுத்த சமயத்திலும் –

2010 – 11 ஆம் ஆண்டுகளில் மஹிந்த ராஜபக்ஷ அரசோடு 16 சுற்று சமரசப் பேச்சுக்களை நடத்திய வேளையிலும் –

மைத்திரி – ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசோடு தீர்வு முயற்சிகளை முன்னெடுத்த போதும் –

வரவு – செலவுத் திட்டங்களை தமிழரசுக் கட்சியும் அல்லது தமிழரசுக் கட்சி உட்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரித்து வாக்களித்தன என்பது நினைவு கொள்ளத் தக்கது.

*  *  *

வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி நடத்த இருக்கும் அரச எதிர்ப்புப் பேரணியும் கூட்டமும் அரசுத் தரப்பில் மிக உன்னிப்பாக அவதானிக்கப்படுவதாகத் தெரிகிறது.

இந்த அரசியல் நடவடிக்கை குறித்தும், அதைக் கையாளுகின்ற முறைமை குறித்தும் அரச உயர் மட்டத்திலும் பாதுகாப்பு உயர் மட்டத்திலும் நேற்று முன்தினம் நீண்ட நேரம் ஆராயப்பட்டதாகக் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இந்த எதிர்ப்புப் பேரணியை முன்நகர்த்துவதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளம் தலைவர் நாமல் ராஜபக்ஷ அதிகம் முனைப்புக் காட்டுகின்றமையால் அவர் குறித்து இந்தக் கூட்டங்களில் அதிகம் பேசப்பட்டதாகத் தெரிகிறது. நுகேகொடை கூட்டத்திற்கு முன்னர் நாமல் ராஜபக்ஷவை 'உள்ளே' வைப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா, அதற்கான பழைய கேஸ் கட்டுக்கள், சந்தர்ப்பங்கள் உள்ளனவா என்பது பற்றியும் பேசப்பட்டதாக ஒரு தகவல்.

எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்த அந்த எதிர்ப்பு நடவடிக்கை சூடு பிடிக்குமா என்பது இதுவரைத் தெரியவில்லை. ஆனால் அரசு தரப்பு அதற்கு இடையூறு செய்வதாக நினைத்துக் கொண்டு செய்யக்கூடிய காரியங்கள் சில சமயங்களில் அந்த எதிர்ப்பு நடவடிக்கையைப் பெரு வெற்றியாக மாற்றி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

## மாவீரர் துயிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களிடம் கையளித்து, அந்த இடங்களை அங்கீகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு அவை மக்களிடம் கையளிக்கப்படும் பட்சத்தில் அவற்றைப் பராமரிக்கும் செலவை தமிழர்களாகிய நாங்கள் பார்த்துக்கொள்வோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இன்று (நேற்று) கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதாவது இடதுசாரிக் கொள்கையுடன் போராடிய ஒரு மாவீரர் ரோஹண விஜேவீரவின் நினைவுநாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த நாளிலேயே அவர் இலங்கை அரச படையினால் கொல்லப்பட்டார். அதில் ஜே.வி.பி. வீரர்கள் பல்லாயிரம் பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் நினைவஞ்சலியில் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இதேவேளை, இந்த கார்த்திகை மாதத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் மாவீரர்கள் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்கில் 32 இற்கும் மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் உள்ளன. எமது இனத்துக்காக – விடுதலைக்காகப் போராடிய மாவீரர்கள், பொதுமக்கள் இறந்த புனிதமான அந்த இடங்களைப் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு உள்ளது.

இந்த அரசு வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களையும் அங்கே வாழும் தமிழ் மக்களிடம் கொடுக்க வேண்டும். அந்த இடங்களை அங்கீகரிக்க வேண்டும். அங்கே நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை அகற்ற வேண்டும்.

மக்கள் சுயாதீனமாக அங்கே நினைவுகூரலை நடத்துவதற்கு இடத்தைக் கொடுக்க வேண்டும். அந்த இடத்தை அங்கீகரித்து பொதுமக்களுக்கு அதனைக் கொடுக்கும் போது நீங்கள் அதற்கு நிதி ஒதுக்கத் தேவையில்லை. நாங்கள் தமிழர்கள். அதற்கான நிதியை ஒதுக்கி அந்தப் புனிதமான இடத்தைப் பாதுகாப்போம் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக்கொள்கின்றோம். இந்த அரசு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்." – என்றார்.

## அரசுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நவம்பர் 21ஆம் திகதி பேரணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும். இது ஆட்சிக் கவிழ்ப்புக்குரிய போராட்டம் அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

ஏனெனில் அடுத்த தேர்தலின்போது நாட்டு மக்கள் நிச்சயம் இந்த ஆட்சியைக் கவிழ்ப்பார்கள்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே பேரணியின் பிரதான நோக்கம்.

போதை ஒழிப்பு நடவடிக்கை வரவேற்கத்தக்கது. எனினும், போதை ஒழிப்பு என்ற போர்வையில் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதியை மறந்து செயற்படுவது ஏற்புடையது அல்ல." – என்றார்.








## நல்லூரில் மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது யாழ். மாநகர மேயர், பிரதி மேயர், சபை உறுப்பினர்கள், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர்.

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக உள்ள யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் கடந்த சில வருடங்களாக மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு காட்சிப்படுத்தலும், மாவீரர் நாள் நினைவேந்தலும் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், இந்த ஆண்டு அந்தப் பகுதியில் வழமையாக மாவீரர் நினைவேந்தல் பணிகளை முன்னெடுக்கும் தரப்புக்குப் போட்டியாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமக்கே குறித்த காணியை வழங்க வேண்டும் எனக் கோரி வந்தனர்.

ஒரு காணியை இரண்டு தரப்புக்கள் கோரியதால் அதை யாருக்கு வழங்குவது என்பதில் முடிவு எட்டப்படாத நிலை காணப்பட்டது.

இதையடுத்து யாழ். மாநகர சபையின் கடந்த அமர்வில் கருத்துத் தெரிவித்த மாநகர மேயர் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜா, இம்முறை அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைத்து குறித்த காணியில் மாவீரர் நினைவேந்தலை முன்னெடுக்கப் போவதாக அறிவித்தார்.

இந்த யோசனையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) தவிர்ந்த யாழ். மாநகர சபையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் வரவேற்றனர். இதையடுத்தே குறித்த காணியில் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கான பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாநகரமேயரும், பிரதிமேயரும் "மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் மரணித்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்." – என்று அழைப்பு விடுத்தனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நீதித் துறையின் சீத்துவம்

ஒருவர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படுகிறார் அல்லது சிறை வைக்கப்படுகின்றார் என்றால் அவரது நலனுக்கும் பாதுகாப்புக்கும் சிறைத்துறை மற்றும் நீதி அமைச்சு உட்பட்ட நீதித்துறை பொறுப்பாகின்றது.

இலங்கையில் பொதுவாகவே பொறுப்புக் கூறல் விவகாரம் உரிய முறையில் பின்பற்றப்படுவதில்லை என்பதால் சிறைத் துறையிலும் கைதிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு சிறைத் துறையோ நீதித் துறையோ நீதி அமைச்சோ பொறுப்பேற்பதில்லை.

இந்தப் பின்புலத்தில் -

கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறை வழிமுறைகள் இல்லாத காரணத்தால் சிறைச்சாலை இறப்புகள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவால் வெளியிடப்பட்ட 'இலங்கையில் கைதிகளின் நிலைமை' - 2025 ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதல் நவம்பர் 2024 வரை இலங்கை சிறைகளில் குறைந்தது 168 கைதிகள் உயிரிழந்துள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில்,155 பேர் நோய்களாலும், ஒன்பது பேர் தற்கொலையாலும், இரண்டு பேர் சிறைச்சாலைகளில் தாக்குதல்களாலும், இரண்டு பேர் சிறைச்சாலைகளில் விபத்துகளாலும் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டு மார்ச் முதல் மே வரையிலான இரண்டு மாத காலத்தில் ஐந்து சிறைச்சாலை மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் பராமரிப்பு வசதிகளில் கடுமையான பலவீனம் இருப்பதாகவும், பெரும்பாலான இறப்புகள் புறக்கணிக்கப்பட்ட மருத்துவ நிலைமைகள் மற்றும் போதுமான மருத்துவ தலையீடு இல்லாததால் ஏற்பட்டன எனவும் கூறப்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில், கைதிகளின் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் பொருள்களை வலுக்கட்டாயமாக உட்கொள்வதும், அடிப்படை மருத்துவ சேவையை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதும் இந்த நிலைமையை தீவிரமாக அதிகரிக்க வழி வகுத்துள்ளதாகவும் அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

சமீப காலங்களில் சிறைச்சாலைகளில் நடந்த தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் இந்தப் பின்னடைவை மேலும் நிரூபிக்கின்றன என்றும், மார்ச் 19, 2025 அன்று, மகஸின் சிறையில் 54 வயது கைதி ஒருவர் உப்பு நீரை வலுக்கட்டாயமாக குடிக்க வைக்கப்பட்ட பின்னர் இறந்தார் என்றும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலியே பயிரை மேய்வது போல கைதிகளைப் பாதுகாக்க வேண்டிய நீதித் துறையே தமது கட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் பாதிப்புக்கும் உயிரிழப்புக்கும் காரணமாகின்றது என்பதும், அது குறித்து பொறுப்புக் கூறல் கடப்பாடு உரிய முறையில் நடைமுறையில் இல்லை என்பதும் இலங்கையின் நீதித்துறையின் சீத்துவத்தை மற்றொரு தளத்தில் வெளிப்படுத்தி நிற்கின்றது என்பது உண்மை.





# புதிய தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள் நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று தூதுவர்கள் மற்றும் இரண்டு உயர் ஸ்தானிகர்கள் நேற்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் தங்கள் நற்சான்றுப் பத்திரங்களை கையளித்தனர்.

இன்று தங்கள் நற்சான்றுப் பத்திரங்களை கையளித்த புதிய தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள் பின்வருமாறு.

1. கொழும்பை தளமாகக் கொண்டு பணியாற்றும் கனடா உயர் ஸ்தானிகர் இசபெல் மாரி கெதரின் மார்ட்டின்

2. கொழும்பை தளமாகக் கொண்டு பணியாற்றும் நெதர்லாந்து இராச்சிய தூதுவர் வீபே ஜேக்கப் டி போயர்.

3.கொழும்பை தளமாகக் கொண்டு பணியாற்றும் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் மெதிவ் ஜோன் டக்வேர்த்.

4.புது டில்லியை தளமாகக் கொண்டு பணியாற்றும் அல்ஜீரியா மக்கள் ஜனநாயகக் குடியரசின் தூதுவர் அப்துநோர் ஹொலிஃபி.

5. புது டில்லியை தளமாகக் கொண்டு பணியாற்றும் ஐஸ்லாந்து குடியரசின் தூதுவர் பெனடிக்ட் ஹஸ்குல்ட்சன்.

இராஜதந்திரிகளை அன்புடன் வரவேற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இணைந்து பணியாற்ற அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த நிகழ்வில், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.













# பருத்தித்துறை நவீன சந்தையின் மேல் தளத்தில் தன்னிச்சையாக மரக்கறி வியாபார நடவடிக்கை

பருத்தித்துறை நவீன சந்தையின் மேல் தளத்திற்கு நேற்றைய தினம் சென்ற மரக்கறி வியாபாரிகள் வியாபார நடவடிக்கயில் ஈடுபட்டு வருகின்றனர்.

10 இற்கும் மேற்பட்ட மரக்கறி வியாபாரிகள் இவ்வாறு தன்னிச்சையாக பழைய இடத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதிதாக அமைத்துக்கொடுக்கப்பட்ட சந்தையில் மழை வெள்ளம் ஏற்பட்டதால் அவர்கள் இவ்வாறு பழைய இடத்துக்கு வந்துள்ளனர்.

இதையடுத்து அங்கிருந்து மரக்கறி வியாபாரிகளை வெளியேற்றுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரினால் பருத்தித்துறை நகரபிதாவிற்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதையடுத்து மரக்கறி வியாபாரிகள், வர்த்தகர்களுடன் நேற்று மாலை பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் கலந்துரையாடல் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது தங்களுடைய முடிவில் மாற்றமில்லை நவீன சந்தை கட்டடத் தொகுதியில் தான் இனிமேல் வியாபார நடவடிக்கையினை செய்வோம் என மரக்கறி வியாபாரிகள், வர்த்தகர் சங்கத்தினர் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.









# வென்றெடுக்கப்பட்ட அதிகாரம் பொதுமக்களுக்கானது மாத்திரமே

## ஜனாதிபதி தெரிவிப்பு

வென்றெடுக்கப்பட்ட அதிகாரம் பொதுமக்களுக்கானது மாத்திரமே என ஜனாதிபதி அனுர குமாரதிஸாநாயக்க தெரிவிக்கிறார்.

கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

“இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஒப்பிட்டு பேசுவதை ஒரு சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர். எனினும் ஏனைய அரசாங்கத்தை போல நாம் ஒருபோதும் இல்லை. பழய அரசாங்கம் ஒன்று ஆட்சிக்கு வருமாயின் அதை போன்றதொரு அரசாங்கத்துடன் நன்மை தீமைகளை ஒப்பிட்டு பேசலாம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுடன் ஒன்றிணைந்த தரப்படுத்தப்பட்ட அரசாங்கத்தை கட்டியெழுப்பியுள்ளது.

ஆட்சியை கைப்பற்றியதன் பின்னர் நாட்டின் சட்ட விதிமுறைகளையும் தரப்படுத்தியுள்ளோம். அன்று ஆட்சியை கையகப்படுத்துவதற்காக போராடினோம் இன்று இந்த நாட்டிற்கு வெற்றியை பெற்று தருவதற்காக கடுமையாக போராடி வருகிறோம். அப்போதைய நோக்கமும் தற்போதைய நோக்கமும் அபிலாசையும் மாத்திரமே மாறியுள்ளது. மக்களால் வழங்கப்பட்ட பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, அவர்களை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் ஆட்சி செய்யக் கூடாது என்ற பொறுப்புணர்வுடன் செயல்படுகிறோம்.” என்றார்.






# சினிமாக்களில் வன்முறை, சாதியை முன்னிறுத்துவதை நிறுத்த வேண்டும்

## அண்ணாமலை கோரிக்கை

“திரைப்படங்களில் வன்முறை, சாதி போன்றவற்றை முன்னிறுத்துவதை நிறுத்த வேண்டும். குற்றச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதில் எல்லாருக்கும் பொறுப்பு இருக்கிறது.”

– இவ்வாறு பா.ஜ.கவின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

பா.ஜ.க. மாநில விவசாய அணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் அறிமுகக் கூட்டம், கோவை சின்னியம் பாளையத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் நேற்று நடந்தது. இதில், பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, விவசாய அணி மாநில தலைவர் ஜி.கே. நாகராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அண்ணாமலை கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் வேளாண்மைத் துறை அதிகாரிகளை, விவசாய பணிகளை தவிர அனைத்து வேலைகளையும் பார்க்க வைக்கின்றனர். ஆட்சியாளர்கள் விவசாயத்தை முன்னுரிமை படுத்துவதில்லை.

தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பு சார்பில், கோவையில் எதிர்வரும் 19 ஆம் திகதி மாநாடு நடைபெறுகிறது. இதில், பங்கேற்க பிரதமர் மோடி வரும் அன்றைய தினம் கோவை வருகிறார். இம்மாநாட்டில் ஐந்தாயிரத்துக்கு மேற்பட்ட இயற்கை விவசாயிகளையும், 50 இற்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளையும் பிரதமர் சந்திகின்றார்.

திரைப்படங்களில் வன்முறை, சாதி போன்றவற்றை முன்னிறுத்துவதை நிறுத்த வேண்டும். குற்றச்சம்பவங்களை கட்டுப்படுத்துவதில் எல்லாருக்கும் பொறுப்பு இருக்கிறது. தி.மு.க. அரசை பொறுத்தவரை அவர்கள் வேலையை சரியாக செய்திருக்க வேண்டும். பொலிஸை பொறுத்தவரை அவர்கள் வேலையில் கோட்டை விட்டிருக்கிறார்கள். அரிவாள் எடுத்து கோயிலுக்கு போவதற்கும், ஆட்சியாளர்களுக்கும் என்ன சம்பந்தம். இதில் பொலிஸ் தோல்வி அடைந்திருக்கிறது. கோவை சம்பவத்திலும் பொலிஸார் தோல்வி அடைந்து இருக்கின்றனர். பொலிஸ் தனது தவறுகளை திருத்திக் கொண்டு செயல்பட வேண்டும். பொலிஸை இன்னும் சிறப்பாக முதல்வர் கையாள வேண்டும்.” என்றார்.

# தி.மு.க. வேஷம் போடவில்லை; விஜய்க்கு அமைச்சர் நேரு பதில்




த.வெ.க. தலைவர் விஜய்க்கு வேண்டுமானால்தி.மு.கவினர் நல்லவர்கள் போல் வேஷம் போடுவதாகத் தெரியலாம். ஆனால் தி.மு.க, அரசு நிறைவேற்றும் திட்டங்களால் தி.மு.கவை மக்கள் நல்லவர்களாகவே பார்க்கிறார்கள் என்று அமைச்சர் நேரு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

“த.வெ.க. தலைவர் விஜய்க்கு வேண்டுமானால் தி.மு.க. ஆட்சி நல்லவர்கள் போல் வேஷம் போடுவது போல் தெரியலாம் ஆனால் நாட்டு மக்களுக்கு, தி.மு.க.வும், தி.மு.க. ஆட்சியும், முதல்வரும் நல்லவர்களாகவே தெரிகிறார்கள். பல நல்ல திட்டங்களை நாட்டு மக்களுக்காக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். தி.மு.கவினர் நல்லவர்கள் போல் வேஷம் போடவில்லை, உண்மையாக நல்லவர்களாக இருப்பதால்தான் அனைத்து தரப்பு மக்களுக்குமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மக்கள் அனைவரும் முதல்வரை வரவேற்கிறார்கள். 210 தொகுதிகளில் வெல்வோம் என கூறும் அ.தி.மு.கவினர் மீதி உள்ள 20 தொகுதிகளை ஏன் விட்டுவிட்டார்கள்.” என நகைச்சுவையாக தெரிவித்துள்ளார்.

# மோசடி வழக்கில் சிக்கினார் பிரபல சீரியல் நடிகர் தினேஷ்



பண மோசடி வழக்கில் பிரபல சீரியல் நடிகரும், பிக்பாஸ் பிரபலமுமான நடிகர் தினேஷை பணகுடி பொலிஸார் கைது செய்தனர்.

நெல்லை மாவட்டம் வள்ளியூர் அருகே உள்ள தண்டையார்குளத்தை சேர்ந்த கருணாநிதி என்பவரால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு அரசு வேலை பெற்றுத்தருவதாக கூறி நடிகர் தினேஷ் ரூ.3 லட்சம் பெற்றதாகவும் ஆனால் அரசு வேலை வாங்கி தரவில்லை எனவும் முறைப்பாடளித்தவர் தெரிவித்துள்ளார்.

பணத்தை கேட்டபோது கொடுக்காமல் அலைக்கழித்ததுடன் தன்னை தாக்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் நடிகர் தினேஷை கைது செய்து பொலிஸார் விசாரணகளை மேற்கொண்டனர்.

சின்னத்திரை ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான நடிகர் தினேஷ், பிக்பாஸ் சீசன் 7 நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்துகொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உங்களுக்கு எத்தனை மனைவிகள்? சிரிய ஜனாதிபதியிடம் கேட்ட ட்ரம்ப்



சிரிய ஜனாதிபதி அகமது அல்-ஷரா அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

அப்போது வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்து பேசினார்.

சிரிய ஜனாதிபதி ஒருவர் வெள்ளை மாளிகைக்கு வருகை தந்தது இதுவே முதல்முறையாகும்.

வெள்ளை மாளிகையில் இரு நாட்டு ஜனாதிபதிகளின் சந்திப்பானது நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, சிரிய ஜனாதிபதிக்கு வாசனைத் திரவியத்தை ஜனாதிபதி ட்ரம்ப் பரிசளித்தார்.

அப்போது, “இது ஆண்களுக்கான வாசனைத் திரவியம், இதோ,” என்று ட்ரம்ப் சிரிய ஜனாதிபதியிடம் கூறினார்.

மேலும் அவர் அந்த வாசனைத் திரவியத்தை சிரிய ஜனாதிபதி மீது தெளித்து, “இது மிகச் சிறந்த வாசனைத் திரவியம்” என்று கூறினார்.

பின்னர் அவர், ”மற்ற வாசனைத் திரவியங்கள் உங்கள் மனைவிக்கானது. உங்களுக்கு எத்தனை மனைவிகள்?” என்று ட்ரம்ப் கேட்க, அவரும் ஒன்றே ஒன்று தான் என பதிலளித்ததால் உலகத் தலைவர்கள் மத்தியில் சிரிப்பலை எழுந்தது.

இதுதொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் தற்போது வைரலாகி வருகிறது.




# இஸ்ரேலியப் படைகளின் தாக்குதலில் இரு பலஸ்தீனியக் குழந்தைகள் பலி

இஸ்ரேலிய படைகளின் தாக்குதலில் பலஸ்தீனியக் குழந்தைகள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹெப்ரோன் அருகே நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இந்த இரண்டு குழந்தைகளும் உயிரிழந்தனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பலஸ்தீன மக்கள் தற்காலிகமாகக் குடியேறியுள்ள பகுதியில் இஸ்ரேலிய படைகள் தொடர்ந்தும் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருவதாக பலஸ்தீனத்தின் உள்ளூர் ஆர்வலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தப் பகுதியை விட்டுக் குடியிருப்பாளர்களை வெளியேறச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இஸ்ரேலிய படைகள் செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.







# டில்லியில் மேற்கொள்ளப்பட்டது தெளிவான பயங்கரவாத தாக்குதல்

## அமெரிக்கா அறிவிப்பு

இந்தியாவின் டில்லியில் மேற்கொள்ளப்பட்டது, ஒரு தெளிவான பயங்கரவாத தாக்குதல் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு அமெரிக்காவும் உதவியளிக்க தயாராக உள்ளதாகவும் அமெரிக்க வெளி விவகார அமைச்சர் மார்கோ ரூபியோ குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த பயங்கரவாத தாக்குதல் குறித்து, இந்தியா மிக கவனமாகவும் திறமையாகவும் விசாரணை நடத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னதாக டில்லி செங்கோட்டை எதிரே கடந்த 10ஆம் திகதி இரவு வெடிபொருளை மறைத்து எடுத்துச்சென்ற கார் ஒன்று வெடித்துச் சிதறியது.

இதன்போது 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.



- என்.ஹரன் -

# மெல்லக் கொல்லும் சீனி...!

இன்று உலகம் முழுவதும் பேசப்படும் நோய்களில் ஒன்று நீரிழிவு நோய். உலக நீரிழிவு நோய் தினம் நவம்பர் 14 ஆம் திகதியாகும்.

நீரிழிவு நோயாளிகள், வாழ்க்கை முறையில் செய்யும் சின்னச் சின்ன மாற்றங்கள் மூலம் அந்நோயைத் திறம்படச் சமாளிக்க முடியும். கடுமையான உடற்பயிற்சிகளைக் கண்டு அஞ்சாமல் கொஞ்சம் கொஞ்சமாக முயற்சி செய்யலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நோயை முழுதாகக் குணமாக்க முடியாது. இருப்பினும் மருத்துவ ஆலோசனைப்படி நடப்பதில் நோயாளி முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் இந்நோயின் தொடர் விளைவுகளைத் தடுக்கவோ அல்லது குறைக்கவோ முடியும். நீரிழிவு நோயாளி ஒருவரைப் பொருத்த வரையில் சுயகட்டுப்பாட்டுடன் எந்நேரமும் கவனத்துடன் செயற்பட்டால் உடல் ஆரோக்கியத்தைப் பேணி, வாழ் நாளை நீடித்துக்கொள்ள முடிகிறது.

நீரிழிவு நோய் குறித்து நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக அறியப்பட்டிருந்தாலும் கூட, இதற்கான உறுதியான சிகிச்சை முறை என்பது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் தான் கண்டறியப்பட்டது.

1922ஆம் ஆண்டில் பேண்டிங்க் அண்ட் பெஸ்ட் என்ற கனடா நாட்டு விஞ்ஞானிகள் கூட்டணி இன்சுலின் மூலம் நீரிழிவு நோயை முழுமையாக கட்டுப்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்தனர். அதுவரை, ஒருவருக்கு நீரிழிவு நோய் வந்தால் மரணம் நிச்சயம் என்கிற நிலைதான் நீடித்தது. இன்சுலினைக் கண்டுபிடித்த 'பேண்டிங்க் அண்ட் பெஸ்ட்' என்ற விஞ்ஞானிகள் கூட்டணியின் தலைவர் பிரெடெங்க் பேண்டிங்கின் பிறந்த நாளான நவம்பர் 14 ஆம் திகதியை, ஆண்டுதோறும் உலக நீரிழிவு நோய் தினமாக கடைபிடிக்கப்படுகிறது. முதன்முதலில் இது 1991 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்படத் தொடங்கியது, தற்போது உலக அளவில் 192 நாடுகளில் அனுசரிக்கப்படுகிறது.

வயது வித்தியாசம், தகைமை, தராதரம், பால் இன பேதம், செல்வம், வறுமை, நகரம் கிராமம் மட்டுமன்றி தயவு தாட்சண்யம் கூட காட்டாது நீரிழிவு நோய் வேகமாக பரவி வருவதாக கூறப்படுகின்றது. உலக நீரிழிவு நோய் தினத்தில் நீரிழிவுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பிரச்சாரங்கள் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன. பல்வேறு சுகாதார அமைப்புகளும் மருத்துவமனைகளும், தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும், நீரிழிவு நோய் அமைப்புகளுடன் இணைந்து இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன. உலக அளவில் நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களுக்கு வானொலி, தொலைக்காட்சி, விளையாட்டுப் போட்டிகள், பிரச்சாரங்கள், விழிப்புணர்வுக் கூட்டங்கள், பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள் ஆகிய தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அது மட்டுமல்லாமல், ஐக்கிய நாடுகள் சபை இந்த நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தனியான அடையாளச் சின்னம் ஒன்றை வடிவமைத்து வெளியிட்டிருக்கிறது. நீலநிறத்திலான வளையம் நீரிழிவு நோய் தடுப்பின் சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எய்ட்ஸ் நோய்க்கு அடுத்தபடியாக நீரிழிவு நோய்க்கு மட்டுமே ஐக்கிய நாடுகள் சபை இப்படித் தனியான ஒரு சின்னத்தை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் உலக அளவில் நீரிழிவுநோய் என்பது மிகப்பெரும் ஆட்கொல்லியாக உருவெடுத்து வருகிறது என்கிற ஆபத்தை ஐக்கிய நாடுகள் சபை குறிப்புணர்த்துவதாக நீரிழிவு நோய் நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

தற்போது உலக அளவில் 18 கோடிக்கு மேற்பட்டோர் நீரிழிவு நோயுள்ளவர்களாக உள்ளனர். இந்த எண்ணிக்கை 2025 இல் 36 கோடியே 50 லட்சமாக அதிகரிக்கலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலகளாவிய ரீதியில் நீரிழிவு நோயாளிகள் அதிகம் உள்ள 10 நாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) இந்தியா 2) சீனா 3) அமெரிக்கா 4) இந்தோனேசியா 5) ஜப்பான் 6) பாகிஸ்தான் 7) ரஷ்யா 8) பிரேஸில் 9) இத்தாலி 10) பங்களாதேஷ் என்பனவாகும் (2009 ஆம் ஆண்டுத் தகவல் படி .

முதலிடத்தில் காணப்படும் இந்தியாவில் தற்போது சுமார் 2 கோடியே 50 லட்சத்திலிருந்து 3 கோடி வரையானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதில் ஆச்சரியம் என்னவென்றால், 2 கோடி பேருக்குத் தங்களுக்கு இந்த நோய் இருப்பதே தெரியாமல் இருக்கின்றனர் என்றும் ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இவ்வாறு நோயைப் பற்றித் தெரிந்து கொள்ளாதோர் இந்தியாவில் மாத்திரமல்லாமல் மூன்றாம் உலக நாடுகளிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

உலகெங்கும் சுமார் 347 மில்லியன் நீரிழிவு நோயாளிகள் இருப்பதாக, உலகச் சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிறது.

மரணத்தை ஏற்படுத்தும் நோய்களில் அது, 2030 ஆம் ஆண்டுக்குள் ஏழாவது இடத்தைப் பிடித்துவிடுமென்று மதிப்பிடப்படுகிறது.

நீரிழிவு தொடர்பாக கருத்து வெளியிட்ட அமெரிக்க டாக்டர் ஒருவர் 'நீரிழிவு உள்ள ஒருவர் தனக்கு நீரிழிவு உள்ளதென்று தெரிந்து கொண்டால், நீரிழிவு என்பது அவருக்கு ஒரு நோயல்ல." என்று குறிப்பிட்டிருந்தார். இதன் அர்த்தம் நீரிழிவு நோய் உள்ள

தொடர்ச்சி▼



# மெல்லக் கொல்லும் சீனி...!

தொடர்ச்சி▲

ஒருவர் தனது கட்டுப்பாட்டின் மூலம் நோயைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும். நாம் நோயைக் கட்டுப்பாடாக வைத்திருப்பதற்கு, முதலில் அந்நோயைப்பற்றி முழுமையாக நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். அதாவது நீரிழிவு நோய் என்ன காரணத்தால் ஏற்படுகிறது. அது மனித உடலை எந்த வகையில் பாதிக்கிறது என்பதைப் பற்றிய விளக்கங்களை நோயாளிகள் மட்டுமல்லாது அனைவரும் அறிந்திருத்தல் வேண்டியது இன்றியமையாதது.

குருதியில் குளுக்கோசின் அளவு கூடும் போது அதாவது 100 அடர் குருதியில் குளுக்கோசின் அளவு 180 மில்லிக் கிராம் இற்கு மேலாகக் கூடும் போது சிறுநீரகங்கள் மேலதிக குளுக்கோசை சிறுநீருடன் வெளியேற்றுகின்றன. இதனை சிறுநீரில் சீனி (Sugar) இருக்கிறது எனக் குறிப்பிடுகிறோம். இவ்வாறு சிறுநீருடன் குளுக்கோஸ் போகும் போது உடலிலிருந்து அதிகம் நீரும் சேர்ந்தே வெளியேறும். இதனால் வழமையிலும் பார்க்க அதிகளவு சிறுநீர் உண்டாவதால் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனாலேயே இதை நீரிழிவு என்கிறோம். அதிகளவு நீர் வெளியேறுவதால் மிதமிஞ்சிய தாகமும் ஏற்படுகிறது.

சிலரின் உடலில் நீரிழிவு நீண்டகாலங்களாகக் காணப்பட்டாலும் கூட நோயாளியின் அறியாத் தன்மை காரணமாக தனக்கு நீரிழிவு உள்ளது என்பதை நோயாளி உணர்ந்து கொள்வதில்லை. இதனால் பல பாரதூரமான விளைவுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. எனவே நீரிழிவு நோயின் மூலமான அறிகுறிகள் சிலதை நோக்குவோம்.

1. அடிக்கடி சிறுநீர் கழித்தல், வழமைக்கு மாறாக இரவிலும் பல தடவை சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற்படல்.

2 அடிக்கடி தாகம் ஏற்படல்.

3. அசாதாரண பசி ஏற்படல்.

4. உடல் சோர்வாக இருத்தல்.

5. உடல் நிறை குறைந்து கொண்டு போதல்.

6. தலை சுற்றுதல், மயக்கம் போன்றன அடிக்கடி ஏற்படல்.

7. கை, கால்களில் விறைப்புத் தன்மை ஏற்படுதல்.

8. தேகத்தில் பருக்களும், கட்டிகளும் தோன்றல்.

9. ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புகளில் கூடிய அழற்சி ஏற்படல்.

10. கண் பார்வை குறைவடைதல்.

11. புண்கள் ஏற்படின் அவை ஆறுவதற்கு வழமையிலும் கூடிய நாள்கள் எடுத்தல்.

12. எளிதில் கோபமடைதல். மேற்குறிப்பிட்ட அறிகுறிகளில் சிலவற்றை சிலகாலமாக நீங்கள் அவதானித்தால் அருகிலுள்ள வைத்திய சாலைக்குச் சென்று சிறுநீர்ப்பரிசோதனை செய்வதன் மூலம் அந்நோய் இருக்கின்றதா? என்பதை அறிந்து கொள்ளலாம்.

பின்பு இரத்தப் பரிசோதனை செய்வதன் மூலமே இந்நோயை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். நீரிழிவு நோய் காணப்படுமிடத்து டாக்டரை அணுகி உரிய சிகிச்சை முறைகளை மேற்கொள்ளல் அவசியமாகும். பொதுவாக நீரிழிவு நோயை நான்காக வகைப்படுத்தலாம். அதாவது, முதல் வகை நீரிழிவு நோய், இரண்டாம் வகை நீரிழிவு நோய், கர்ப்பகால நீரிழிவு நோய், சதையியில்ீ(யஉசநயளநள) ஏற்படும் கற்களால் உருவாகும் நீரிழிவு நோய் என்ற அடிப்படையில் நான்கு வகையானதாகும்.

நான்காவது வகையான நீரிழிவுநோயை பொறுத்தவரை, சதையியில் ஏற்படும் கற்கள் காரணமாக இது உருவாகிறது. இது உருவாவதற்கு போஷாக்கின்மை உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுப்புற காரணங்கள் இருப்பதாக கூறப்பட்டாலும், இதற்கான பிரதான காரணி எது என்பது குறித்து இன்னமும் ஆய்வுகள் தொடர்கின்றன. நீரிழிவினால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றியும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். ஒரு நீரிழிவு நோயாளி நோயைக் கட்டுப்பாடாக வைத்திருப்பதில் கவனம் செலுத்துவது குறைவடைந்தால் அவர் பாராதூரமான பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவார். இது காலப்போக்கில் உடலில் பல்வேறு தொகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

1. குறைந்த இன்சுலின் தொழிற்பட்டால் ஏற்படும் விளைவுகளால் குருதிக் குழாய்களில் அடைப்பு ஏற்படலாம். இதனால் காலப்போக்கில் குருதி ஓட்டம் குறைவடைவதால் மாரடைப்பு, உயர்இரத்த அழுத்தம் போன்ற இதய நோய்கள் தோன்றலாம்.

2.குறைந்த குருதி விநியோகம் மற்றும் பல காரணங்களால் நரம்புகள் பாதிக்கப்பட்டு உடலின் புலனுணர்வு பாதிக்கப்படும்.

3. விழித்திரையில் மாற்றத்தினால் (Retinopathy) கண் வில்லையில் ஏற்படும் மாற்றத்தாலும் (Cataract) கண்பார்வை இல்லாது போகும் அபாயம் ஏற்படல்.

4. பாலியல் உறுப்புக்கள், சிறுநீரகம், கை, கால், தோல் பகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படலாம். பிரதானமாக இந்நோய்களில் Candida எனப்படும் பங்கசு நோய் ஏற்படும்.

5. சிறுநீரகத்தில் சிக்கல் ஏற்படலாம் அல்லது இயங்க மறுக்கலாம்.

குறைந்த குருதி விநியோகம் நரம்புப் பாதிப்புகளால் பிரதானமாக கால்களில் பாதிப்புகள் ஏற்படல். குறைந்த புலனுணர்வால் நடப்பதில் கஸ்டம் ஏற்படுவதுடன் பாதப் பகுதியில் நோயாளர்கள் உணர முடியாமலேயே புண்கள் தோன்றலாம். இவ்வகைப் புண்கள் குணமடையாது போகின்றபோது பாதிக்கப்பட்ட கால் பகுதிகள் வெட்டியகற்ற வேண்டிய நிலை ஏற்படலாம்.

நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள்

1. சில நோயாளர்களுக்கு இந்நோயை உணவுக்

தொடர்ச்சி▼

# மெல்லக் கொல்லும் சீனி...!

தொடர்ச்சி▲

கட்டுப்பாடுகளின் மூலமும்.

2. சிலருக்கு உணவுக் கட்டுப்பாடுடன் மருந்து, மாத்திரைகள் உட்கொள்வதன் மூலமும்

3. சிலருக்கு உணவுக்கட்டுப்பாடுகளுடன் இன்சுலின் ஊசி ஏற்றுதல் மூலமும் கட்டுபாட்டில் வைத்திருக்கலாம். நீரிழிவு நோய் உள்ளவர்கள் 16 வீதமான மக்கள் இன்சுலின் உபயோகிக்கிறார்கள். மற்றவர்களில் 54 வீதமானவர்கள் மாத்திரைகளும் 17 விதமானவர்கள் இரண்டும் உபயோகிப்பவர்களாகவும் உள்ளனர் என்று புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன.

நீரிழிவுச் சிகிச்சை பெறுவோர் கவனிக்க வேண்டியவை

1. வைத்தியரின் ஆலோசனைப்படி உணவுக்கட்டுப்பாட்டை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

2.வைத்திய ஆலோசனைப்படி குளிசையை அல்லது இன்சுலின் ஊசியை ஒழுங்காக எடுக்க வேண்டும்.

3. மருந்து எடுத்து அல்லது ஊசி ஏற்றி அரைமணி நேரத்திற்குள் (30 நிமிடம்) உணவை உட்கொள்ளுதல் வேண்டும்.

4.சில சந்தர்ப்பங்களில் மருந்த எடுத்த பின் உணவு உட்கொள்ளத்தவறினால் அல்லது மேலதிகமாக மருந்தை உட்கொண்டாலோ களைப்பு, பசி, மயக்கம், தலைச்சுற்று, நெஞ்சுப்படபடப்பு, அதிகளவு வியர்த்தல், உடல் குளிர்தல் போன்ற அறிகுறிகள் தென்படும்.

இப்படியான சந்தர்ப்பங்களில் குளுக்கோசு அல்லது வேறு இனிப்பு வகைகள் உடனடியாக உட்கொள்ளல் அவசியமாகும். இதனால் சிறிதளவு இனிப்பு வகைகளோ அல்லது குளுக்கோசோ எந்த நேரமும் உங்களுடன் வைத்திருத்தல் நன்று. (குறிப்பாக இன்சுலின் அதிகளவில் உடலில் ஏற்றிக் கொள்பவர்கள்) மேலும் நீரிழிவு நோயாளிகள் வெளியிடங்களுக்குத் தனியே செல்லும் போது தான் ஒரு நீரிழிவு நோயாளி என்பதை தெரிவிக்கும் விவரமடங்கிய குறிப்பொன்றை தன்னுடன் வைத்திருத்தல் பாதுகாப்பு மிக்கதாகும்.

5. தினமும் தேகாப்பியாசம் செய்தல் வேண்டும்.

6. உடல் சுத்தத்தைப் பேணல் வேண்டும். பிரதானமாகப் பாதங்களைச் சுத்தமாகவும் உலர்ந்ததாகவும் பேண வேண்டும். நீரிழிவு நோயுள்ளவர்கள் தனது கால்களையும், கால் நகங்களையும் தினம் தோறும் அவதானித்து கொள்ளல் வேண்டும்.

7. உணவுக்கட்டுப்பாடின்றி உண்பதன் மூலமோ அல்லது மருந்துகளை ஒழுங்கீனமாக பாவிப்பதன் மூலமாகவோ குருதியில் குளுக்கோசின் அளவு அதிகமாகி வயிற்றுப் புரட்டல், நாவரட்சி, மயக்கம் போன்றன ஏற்படலாம். அப்படி ஏற்படின் உடனடியாக மருத்துவரை நாடல் வேண்டும்.

நீரிழிவு நோய்களே தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்களில் 98 சதவீதமானவர்களைப் பாதிக்கிறது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. முதல் வகை நீரிழிவு நோய் என்பது பெரும்பாலும் குழந்தைகளைத் தாக்கும் தன்மை கொண்டது. இதனால் சில மருத்துவர்கள் இதை குழந்தைகளின் நீரிழிவு நோய் என்றும் அழைக்கிறார்கள்.

குழந்தை பிறந்தது முதல் முப்பது வயதுவரை தாக்கும் தன்மை கொண்டது எனப்படுகின்றது.

இந்த முதல் பிரிவு நீரிழிவு நோய் ஏன் ஏற்படுகிறது என்பது தொடர்பில் தெளிவான உறுதியான ஆராய்ச்சி முடிவுகள் எட்டப்படவில்லை. மனிதர்களின் உடம்பில் இயற்கையிலேயே இருக்கும் நோய் எதிர்ப்புத்தன்மையானது, திடீரென்று சதையியியைத் (Pancreases) தாக்கி அதில் இருக்கும் இன்சுலின் சுரக்கும் சுரப்பிகளை அழித்து விடுகிறது. இதனால் இன்சுலின் சுரக்கும் தன்மையை சதையி இழந்துவிடுகிறது. இப்படி மனித உடம்பின் ஒரு பகுதி கலங்கள் , இன்னொரு பகுதிக் கலங்களை ஏன் தாக்குகிறது என்பதற்கு இதுவரை உறுதியான காரணங்கள் தெரியவில்லை. ஒருவகையான வைரஸ் தாக்குதல் காரணமாகவே இப்படி நடப்பதாக அண்மைக்கால கண்டுபிடிப்புகள் கூறினாலும் அந்தக் குறிப்பிட்ட வைரஸை இனம் காண்பதற்கான ஆய்வுகள் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதனால், இந்த முதல் வகை நீரிழிவு நோயைப் பொறுத்தவரை, இது ஒருவருக்கு வந்தால் அவருக்கு ஆயுள்காலம் முழுமைக்கும் இன்சுலின் ஊசிமூலம் குளுக்கோசின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சிறந்த வழியாகக் கூறப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பாலானவர்களை பாதிப்பது இரண்டாவது வகை நீரிழிவு நோயாகும். இந்த இரண்டாவது வகை நீரிழிவு நோயைப் பொறுத்த வரை, அது ஒருவருக்கு வருவதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன.

பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருந்தால் அவர்களின் பிள்ளைகளுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புகள் 80 சதவீதம் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அது தவிர கூடுதல் உடல் பருமன், அதிகபட்ச கொழுப்புச் சத்துள்ள உணவுகள் சாப்பிடுவது, உடற்பயிற்சியற்ற வாழ்க்கைமுறை போன்ற காரணிகள், ஒருவருக்கு நீரிழிவு நோயை வரவழைப்பதில் முக்கிய பங்காற்றுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மூன்றாவது வகையான கர்ப்பகால நீரிழிவு நோய். சில பெண்களுக்கு கர்ப்பகாலத்தில் தற்காலிகமாக வருவது. கர்ப்பகாலத்தில் பெண்களின் உடல் எடை அதிகரிப்பதாலும், கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சி காரணமாகவும், பெண்களுக்கு கூடுதலாக இன்சுலின் தேவைப்படுகிறது.

பெரும்பாலானவர்களுக்கு இந்தக் கூடுதல் இன்சுலின் இயற்கையாகவே சுரந்தாலும், சில பெண்களுக்கு இது சுரப்பதில்லை. அதனால் அவர்களின் இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகரித்து, அவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படுகிறது. இவர்களின் கர்ப்பத்தின் இறுதியில் குழந்தை பிறந்ததும் இவர்களில் பலருக்கு நீரிழிவு நோய் இல்லாது போய்விடும்.

### பிரசாரங்கள்

ஐ.நா. சபை, நீலநிறத்திலான வளையம் அடையாளச் சின்னமாக வெளியிட்டு இந்த நோய் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துகிறது. சர்வதேச ரீதியில் இந்த நீரிழிவு நோய் குறித்த பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. வயது வித்தியாசம், இன பேதம் என தயவு தாட்சண்யம் பார்க்காமல் இன்றைய நாளில் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு சுகாதார அமைப்புகளும் மருத்துவமனைகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், நீரிழிவு நோய் அமைப்புகளுடன் இணைந்து இந்தத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு தருகின்றன. வானொலி, தொலைக்காட்சி என தொடர்பு சாதனங்கள் இதற்கு ஒத்துழைப்பு தருகின்றன.

### இன்சுலின் அதிகமாவதால் நீரிழிவு நோய்

இன்சுலின் என்ற முக்கிய ஹார்மோன் உற்பத்தி யாவதிலும், அதன் செயல்பாடுகளில் குறை நேர்வதாலும் ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு அதிகரித்து நீரிழிவு நோய் ஏற்படுகிறது. உலக அளவில் இந்தியா தான் நீரிழிவு நோயில் முதல் இடத்தில் உள்ளது. பொதுவாக, நீரிழிவு நோய் என்பதை பற்றிய விளக்கங்களை நோயாளிகள் மட்டுமில்லாது அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

### தடுப்பதில் அதிக கவனம் செலுத்துவோம்

மரபணு குறைபாடு, சுற்றுப்புறம் மற்றும் உடலின் சுய எதிர்ப்பு தன்மை இவற்றால் வரும் நீரிழிவு நோய்க்கு எவ்வித தடுப்பும் உபயோகிக்கப்படாது. மனிதகுலத்தில் எண்ணற்ற நோய்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டாலும் மனிதனின் உடலை சிறிது சிறிதாக பாதிப்புக்கு உள்ளாக்குவது, நீரிழிவு நோய்தான். ஆராய்ச்சிகள் பல செய்யப்பட்டாலும், ஒவ்வொரு முறையும் புதுபுது தகவல்கள் கூறப்படுவதால், நாம் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த என்னதான் வழிமுறைகளை எடுத்துக் கொண்டாலும், அதனை வராமல் தடுப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளவர்கள், எச்சந்தர்ப்பத்திலும் மிகவும் அவதானமான முறையில் தமது உடல் ஆரோக்கியத்தைப் பேணிக்கொள்வதுடன், உணவு முறைகளையும் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பது மிகவும் இன்றியமையாததாகும்.




# மன்னாரில் மாவீரர் பெற்றோருக்கு மதிப்பளிப்பு

**(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர் ஆகியோரை ஒன்றிணைத்து அவர்களை கௌரவிக்கும் முகமாக மன்னார் இரணை இலுப்பைகுளம்,முள்ளிக்குளம், பண்டிவிரிச்சான் பிரதேசத்தை சேர்ந்த 95 மாவீரர்களின் பெற்றோர் நேற்று கௌரவிக்கப்பட்டனர்.

மன்னார் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்களின் உறவுகளுடன் 150 மேற்பட்டோர் பங்குபற்றலுடன் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு உணர்வு பூர்வமாக நடைபெற்றது.

இம்மதிப்பளிப்பில் அருட்தந்தையர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர் பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்குபற்றினர்.

முதலில் மாவீரர் பெற்றோர்களால் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு, மலர் மாலை அணிவிக்கப்பட்டு, பின் அகவணக்கம் செலுத்தப்பட்டு, நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் மாவீரர் தியாகங்கள் பற்றிய பேச்சுக்கள் இடம்பெற்றன. மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோருக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டமையுடன் நினைவாக மரக்கன்றுகள் மாவீரர் பெற்றோர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
















# வடக்கில் வித்தியாசமான அனுபவங்களை பெற்றுக்கொண்டுள்ள தெற்கு பிக்குகள்!

யாழ்ப்பாணத்திற்கு நாங்கள் வந்து வித்தியசமான அனுபவங்களை பெற்றுக் கொண்டுள்ளோம். யாழ்ப்பாண மக்கள் எங்களை அன்புடன் வரவேற்று உப சரித்தனர் என கோட்டை ஸ்ரீகல்யாணி சாமக்ரீ தர்ம மகா சங்க சபையின் 170ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்ட பிக்குகள் தெரிவித்துள்ளனர்

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த பிக்குகள் முன்னதாக யாழ். பொது நூலத்திற்கு சென்று நூலகத்தை பார்வையிட்டமையுடன் நூலகர்களுடன் கலந்துரையாடி புத்தகங்களையும் அன்பளிப்பு செய்தனர்.

தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலை கழகத்திற்கும் , யாழ்ப்பாணத்தில் உள்ள இரண்டு பாடசாலைகளுக்கும் நூல்களை பகிர்ந்தளித்தனர்.

அதன் பின்னர் மாலை வலி. வடக்கு பிரதேசத்திற்கு சென்று அப்பகுதிகளை பார்வையிட்டனர். மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்றமையுடன் ஆலய குருக்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து நேற்றைய தினம் வியாழக்கிழமை, காலை நாக விகாரைக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டமையுடன், விகாரதிபதியுடனும் கலந்துரையாடினர்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அசர்கள் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்தில் நாம் எந்த வித இடர்களுக்கும் முகம் கொடுக்கவில்லை. யாழ்ப்பாண மக்கள் அன்பாக வரவேற்றனர். எமக்கு மொழியே தடையாக இருந்தது. தமிழ் மொழி தெரியாததால், மக்களுடன் பேச முடியாது இருந்தது.

சிங்களத்தில் பேசும் போது, அவர்களுக்கு சிங்கள மொழியை நன்றாக விளங்கி கொள்ள முடியாது இருந்தது. நாம் தமிழ் பேசிய போது, சந்தோசமாக எம்முடன் பேசினார்கள்.

தமிழ் மொழியை கற்றுக்கொண்டு, நாம் இங்கே வந்தால் மிக பயனுள்ளதாக எமக்கு இருக்கும்.

ஏழை மக்கள் தென்னிலங்கையிலும் அதிகளவில் உள்ளனர். ஆனாலும் நாம் வடக்கு மக்களுக்கு உதவ வேண்டும் எனும் நோக்குடன் இங்கே வந்து இந்த மக்களுடன் பழகி சிலருக்கு உதவியுள்ளோம்.

எமது நாட்டில் எல்லா இன மக்களும் ஒற்றுமையாக சந்தோஷமாக வாழ வேண்டும். – என தெரிவித்தனர்.







# சுற்றுலாத்துறைசார் செயலமர்வில் பங்குபற்றிய வடக்கு மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கல்
















வடக்கு மாகான சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய அபி விருத்தி வங்கியின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட சுற்றுலாத்துறைசார் செயலமர்வில் பங்குபற்றிய மாணவர் களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை யாழில் உள்ள நோர்த் கேட் விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகான ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம அதிதி யாக கலந்து கொண்டார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப் பாளர், இலங்கை சுற்றுலாத்துறை நிறுவனத்தின் பணிப்பாளர் பொக்ஸ் ரேசார்ட், நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன் போது பயிற்சியளிக்கப்பட்ட 80 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையை மேலும் மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து குழு நிலை கலந் துரையாடலும் இடம்பெற்றது.




# கொம்மாந்துறையில் உள்ள தோட்டக் கிணற்றில் குளிக்கச் சென்ற சிறுவன் நேற்று சடலமாக மீட்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொம்மாந் துறையில் உள்ள தோட்டக் கிணறு ஒன் றில் குளிக்கச் சென்ற சிறுவனொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நிரேக்சன் என்ற 17 வயதான சிறு வனே இவ்வாறு உயிரிழந்தான்.

ஐந்து வரையான சிறுவர்கள் அப் பகுதியில் உள்ள தோட்டக் கிணற்றில் குளிக்கச் சென்றுள்ளனர். இதன்போது அனைவரும் கயிறு கட்டி நீராடியுள்ள னர். அதன் பின்னர் அனைவரும் வெளி யேறிய நிலையில் ஒரு சிறுவன் மாத்திரம் தொடர்ந்து நீராடியுள்ளார்.

அவரை வருமாறு ஏனையவர்கள் அழைத்துள்ளனர். அந்தச் சிறுவன் சிறிது நேரத்திற்கு பிறகு வருவார் எனக் கூறியுள்ளார்.

நீண்ட நேரமாகியும் சிறுவனைக் காணாததால் ஏனையவர்கள் மீண்டும் அங்கு சென்று பார்த்த போது கயிறு அறுந்த நிலையில் அங்கு சிறுவனை காணவில்லை.

ஏனையோரின் உதவியுடன் தோட்ட கிணற்றில் தேடியபோது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் தொடர்பான மரண விசார ணையை கரவெட்டி திடீர் மரண விசா ரணைஅதிகாரிவே.பாஸ்கரன்மேற்கொண் டார்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் பருத் தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித் துறை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.



# சாவகச்சேரி முன்னாள் நகர முதல்வரின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் நேற்று

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகராட்சி மன்றின் முன்னாள் நகரபிதா அமரர் இ.தேவசகாயம் பிள்ளையின் 4ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

நகரசபை தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், அமரரின் குடும்பத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



முன்னாள் நகரபிதா அமரர் இ.தேவசகாயம்பிள்ளையின் நினைவுப் பகிர்வினை அமரருடன் சமகாலத்தில் உறுப்பினராக இருந்த தற்போதைய உப தவிசாளர் ஞா.கிஷோரும் நினைவுப் பேருரையினை முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி கேசவன் சயந்தனும் ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# முல்லை. – கொழும்பு பாதையில் 15 வருடங்களாக நடந்த சேவையே சொகுசு பஸ் சேவையாக மாற்றம்






**(கி.வசந்தன்)**

முல்லைத்தீவு – கொழும்பு வழித்தடத்தில் கடந்த 15 வருடமாக சேவையில் ஈடுபட்ட பஸ் சேவையே சொகுசு பஸ் சேவையாக மாற்றப்பட்டுள்ளதாக ரட்ணா ரவல்ஸ் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைலைத்தீவு – கொழும்பு சொகுசு பஸ் சேவை ரட்ணா ரவல்ஸ ால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில வெளி மாவட்டத்திற்கு அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பஸ் உரிமையாளர்கள் சிலர் குற்றம் சாட்டியுள்ளனர். இது குறித்து கேட்ட போது ரட்ணா ரவல்ஸ் உரிமையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரட்ணா ரவல்ஸ் பஸ் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து முல்லைத்தீவு – கொழும்பு சேவையில் ஈடுபட்டு வருகின்றது. இதன்போது பயணிகள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவும், மக்கள் பிரதிநிதிகள் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவும் சாதாரண சேவையில ஈடுபட்ட எனது பஸ் வழித்தட அனுமதி சொகுசு பஸ் சேவையாக மாற்றப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஊடாக இந்த அனுமதி முறைப்படி பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே முல்லைத்தீவு – கொழும்பு சொகுசு பஆ சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மேலும் சொகுசு பஸ் சேவைக்கான தேவை இருக்கின்றது. தேவையானவர்கள் அரசாங்கத்தின் அனுமதி பெற்று சேவையில் ஈடுபட முடியும்.

அதைவிடுத்து, எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சொகுசு பஸ் சேவை தொடர்பில் பொய்யான பரப்புரைகளையும், செயற்பாடுகளையும் மேற்கொள்பவர்கள் அதனை நிறுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன் உண்மை நிலையை அறிந்து செயற்பட வேண்டும். – எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முத்துநகர் விவசாயிகளின் நில மீட்புப் போர் பிரதமரின் அலுவலகத்தில் கலந்துரையாடல்





முத்துநகர் விவசாயிகளின் விவசாய நிலங்கள் தொடர்பான பிரச்சினை குறித்து பிரதமர் அலுவலகத்தில் நேற்று அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டம் முத்துநகர் கிராமத்தைச் சேர்ந்த 351 குடும்பங்கள் தங்களது விவசாய நிலங்களை இழந்ததன் காரணமாக துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் இந்த பயிர் சீசனுக்கான நெல் பயிரிடும் பணிகளும் தாமதமாகியுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்துடன் பலமுறை கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதுவரை தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை. சுமார் ஒரு ஒரு மாதத்துக்கு முன்பு பிரதமர் விவசாயிகளை சந்தித்து இந்த பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவார் என வாக்குறுதி அளித்திருந்தாலும், அதுவும் மேலும் தாமதமடைந்த நிலை காணப்படுகிறது.

இதனால் நேற்று கொழும்பில் முத்துநகர் விவசாயிகள் பிரதமர் செயலாளர் அலுவலகத்துடன் இணைந்து ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

அந்தச் சந்திப்பில் பிரதமர் அலுவலகம், இந்த பிரச்சினையில் தங்களது தலையீட்டினை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தது. மேலும், விவசாயிகள் அங்கு நிலவும் சிக்கலான சூழ்நிலையையும், சில அரசியல்வாதிகள் மற்றும் நிறுவனங்கள் பொய்யான தகவல்களை வழங்கி விவசாய நிலங்களை அபகரிக்க முயல்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினர். அதேவேளை அவர்கள் தீர்வுக்கான சில யோசனைகளையும் முன்வைத்தனர்.

இதன் விளைவாக, அடுத்த 10 நாள்களுக்குள் திருகோணமலையில் அனைத்து தரப்பினரும் பங்கேற்கும் மற்றொரு கலந்துரையாடலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

முத்துநகர் விவசாயிகள் ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரக போராட்டம் நேற்று 58 ஆம் நாளாகவும் திருகோணமலையில் தொடர்கிறது.




# ஜே.வி.பியின் 36ஆவது கார்த்திகை வீரர்கள் தினம் பிரதி அமைச்சர் தலைமையில் வவுனியாவில் நேற்று

**(கி.வசந்தன்)**

மக்கள் விடுதலை முன்னணியினால் 36 ஆவது கார்த்திகை வீரர்கள் தினம் நேற்று வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி இருந்தனர்.

இதன் போது அஞ்சலி தீபம் ஏற்றப்பட்டதோடு மலரஞ்சலியும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.














# குச்சவெளி பிரதேச சபைத் தவிசாளருக்கு விளக்கமறியல் மேலும் 14 நாள்கள் நீடிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை குச்சவெளி பிரதேச சபை தவிசாளரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ்.போதலகம உத்தரவிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வெளிநாடு சென்று மீண்டும் நாட்டுக்கு வரவிருந்த ஒருவரின் காணிக்கு உறுதிப்பத்திரம் தயாரித்துக் கொடுப்பதற்காக ஐந்து லட்சம் ரூபா லஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் அயினியாபிள்ளை முபாரக்கின் பிணைக் கோரிக்கையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்தது.

எனினும், சந்தேகநபரான தவிசாளரின் சாரதியான முஹம்மது முஸ்தபா என்பவரைத் தலா பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டமையோடு, அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் விதித்துள்ளார்.

# ஆனந்தபுரம் பச்சைபுல்மோட்டை மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வருடம் முதன்முறையாக இடம்பெறவுள்ள அஞ்சலி நிகழ்வு





(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கும் நடவடிக்கைளில் மக்கள் மற்றும் பணிக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆனந்தபுரம் பச்சைபுல்மோட்டை மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்பரவு செய்யும் நடவடிக்கையில் மக்கள் நேறையதினம் காலை ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 11இற்கும் மேற்பட்ட இடங்களில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன.

கார்த்திகை 27 இல் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் சென்று தமிழர்களின் விடிவிற்காக உயிர் நீர்த்த மாவீரர்களை நினைவிற் கொண்டு வருகின்றார்கள்.

இந்தநிலையில், மணலாறு மாவீரர் துயிலும் இல்லம், களிக்காடு மாவீரர் துயிலும் இல்லம், அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம், தேராவில் மாவீரர் துயிலும் இல்லம், தேவிபுரம் ஆ பகுதி மாவீரர் துயிலும் இல்லம், முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம், இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லம்,வன்னிவிளாங்குளம், இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால், ஆனந்தபுரம் பச்சைபுல்மோட்டை மாவீரர் துயிலும் இல்லம் போன்ற மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்படுகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 14.11.2025




இன்று பதற்றமான சூழ்நிலை உருவாகும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் தரும். ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் ஈடுபடுவதன் மூலம் உங்களை நீங்கள் நல்ல முறையில் வளர்த்துக் கொள்வீர்கள்.

பேச்சு வார்த்தைகளின் மூலம் வரும் மோதல்களைத் தவிர்க்க உங்கள் மேலதிகாரிகளுடன் கவனமாக பழகுங்கள். பொறுமையுடன் இருக்க வேண்டும். விமர்சனங்களை விளையாட்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பாக பழக மாட்டீர்கள். இருவருக்கும் இடையே புரிந்துணர்வு இல்லாததே இதற்குக் காரணம்.

நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு இன்றைய நாள் உகந்ததல்ல. புதிய முதலீட்டு முயற்சிகள் நன்மை அளிக்காது.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடுமையாகப் போராட வேண்டும். உணர்வுகள கட்டுப்படுத்தி அமைதியாக இருக்க வேண்டும். எது வந்தாலும் ஏற்றுக் கொள்ளுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தள்ளிப்போடவேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவை பகிர்ந்துகொள்ள மாட்டீர்கள்.

உங்கள் குடும்ப நலத்துக்காகப் பணத்தை செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகளை எதிர்கொள்ள நேரும்.

உங்கள் தந்தையின் உடல் நலம் திருப்திகரமாக இருக்காது.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். இலக்கில் வெற்றி அடைய வேண்டும் என்ற உங்கள் உறுதி உங்களை முன்னேற்றும். விரைந்து முடிவெடுக்கும் மனநிலை உங்களிடம் காணப்படும்.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியோடு செய்வீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் அலுவலகத்தில் விருந்து அல்லது விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விழா ஒன்றைப் பற்றி உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு உயர வாய்ப்பு உள்ளது. உங்கள் பிரியமானவரின் விழாவில் கலந்து கொள்ள பணம் செலவு செய்வீர்கள்.




உங்கள் அன்றாட செயல்களை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்க்க வேண்டும். மனதில் சஞ்சலமான எண்ணங்கள் காணப்படும். மன அமைதி பெற தியானத்தில் ஈடுபடுங்கள்.

அதிக பணிகள் காணப்படுவதால் இன்று பணிகளை உங்களால் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்டுவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை இது பாதிக்கும் என்பதால் இதனை தவிர்க்க வேண்டும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு உங்களிடம் பணம் காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் கவலை உண்டாகும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி இருமல் போன்ற ஒவ்வாமை பாதிப்புகள் காணப்படும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். இன்று எளிதில் உணர்ச்சிவசப்பட நேரலாம். அமைதியாக இருக்க முயலுங்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துங்கள்.

பணியிடத்தில் காணப்படும் சவால்கள் காரணமாக ஓய்விற்கு நேரம் இருக்காது. பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

குடும்பத் தேவைக்ககாக பணத்தை செலவு செய்வீர்கள். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம் இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று யதார்த்தமான அணுகு முறையைக் கையாள வேண்டும். உங்கள் வளர்ச்சியில் தடைகளை சந்திக்க ஏற்கலாம். இன்று சுமாரான பலன்களே கிடைக்கும்.

பணியிடத்தில் இன்று நீங்கள் வெற்றி பெறுவதற்கு கடுமையான முயற்சிகள் தேவை. திறமையாகப் பணியாற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இது இருவருக்கும் இடையிலான நல்லுறவை பாதிக்கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக தேவையற்ற வகையிலான பணம் செலவு செய்ய நேரலாம்.

உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.




உங்கள் இலக்குகளை நிறைவேற்றுவீர்கள். இந்து மகிழ்ச்சியான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவீர்கள்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இருவரும் அன்பான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதால் அன்பு மேலும் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். வருமானமும் சேமிப்பும் உயரும்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கையான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பலன்கள் உங்களுக்குச் சாதகமாக கிடைக்கும். உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களின் நல்லாதரவு கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழ்நிலை சாதகமாக இருக்கும். எனவே குறித்த நேரத்துக்கு முன்பே கொடுத்த பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறையைக் கையாள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையிலான உறவுப் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமையில் போதுமான பொருளாதார பாதுகாப்பு காணப்படும். இன்று கணிசமான தொகையை சம்பாதிப்பீர்கள். அது உங்களுக்கு திருப்தியைத் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.11.2025




இன்று சிறிது மன உளைச்சல் காணப்படும். பிறருடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும். இசை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்சிகள் உங்கள் மனதுக்குச் சற்று ஆறுதலைத் தரும்.

உங்கள் சக பணியாளர்களால் பணியில் சில இடையூறுகள் ஏற்படும். பணியிடத்தில் சுமுகமான சூழ்நிலை இருக்காது. அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாகவும் நயமாகவும் பேச வேண்டும். குடும்பப் பிரச்சினை சம்பந்தமான சில பேச்சு வார்த்தைகள் காரணமாக உறவில் சிக்கல் ஏற்பட்டு நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

பணப்புழக்கம் இன்று திருப்திகரமாக இருக்காது.




இன்று இனிமையான நாளாக இருக்கும். இன்று புதிய முயற்சிகளில் இறங்கலாம். இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

இன்று நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சிகரமான தருணங்களை கழிப்பீர்கள். இதனால் அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார்.

பணப்புழக்கம் போதிய அளவைவிட அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

இன்று நீங்கள் மிகவும் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




இன்று சில ஏமாற்றங்கள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். இன்றைய சவால்களை சந்திக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

பணியிடத்தில் காணப்படும் கடினமான சூழ்நிலை காரணமாக பணியில் உங்கள் ஆர்வம் குறையும். இதனால் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் இன்று உணர்ச்சிவசப்படாமல் இருக்க வேண்டியது அவசியம். இது உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க உதவும்.

இன்று தேவையற்ற செலவுகள் காரணமாக உங்கள் பணம் கரையும். பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று நற்பலன்கள் உறுதியாக கிடைக்கும் நாள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்புள்ளது. உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மூலம் நல்ல பெயரைப் பெறுவீர்கள். கடின உழைப்பின் மூலம் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

உங்கள் அன்பான நேர்மையான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை பாதுகாப்பானதாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

# பேராறு நீர்த்தேக்க நீரை பருகுவதால் ஆபத்தில்லை மீன்களின் இறப்புக்குக் காலநிலை மாற்றம் காரணம்

## நீர் விநியோக, வடிகாலமைப்பு அதிகார சபை பொறியியலாளர் தகவல்



**(கி.வசந்தன்)**

வவுனியாவுக்கான குடி தண்ணீர் விநியோக நீர்தேக்கமான பேராறு நீர்த்தேக்க நீரை பருகுவதால் ஆபத்தில்லை என வவுனியா மாவட்ட நீர் விநியோக, வடிகாலமைப்பு அதிகார சபையின் பொறியிலாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை முதல் மீன்கள் இறந்து கரை ஒதுங்கி வருகின்றன. இந்த மீன் இறப்புக்கு காலநிலை மாற்றம் காரணம் என்று கூறப்படுகின்றது.

நீரில் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. எனவே, மக்கள் அச்சமின்றி பேராறு குடிதண்ணீர்த் திட்ட நீரைப் பருக முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.